தமிழ்ச்சுவடி விளக்க அட்டவணை

மூன்றாம் தொகுதி

பதிப்பாசிரியர்
முனைவர் த.கோ.பரமசிவம்

தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்

தமிழ்ச்சுவடி விளக்க அட்டவணை

மூன்றாம் தொகுதி

(1001 முதல் 1500 நூல்கள் வரை)

பதிப்பாசிரியர்

முனைவர் த. கோ. பரமசிவம்

தலைவர், ஓலைச்சுவடித்துறை

தொகுப்பாசிரியர்

முனைவர் வே. இரா. மாதவன்

புலவர் ப. வெ. நாகராசன்

தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்.

இத் திட்டத்தின் வாயிலாக உருவாகியுள்ள நூல்களே இப்போது வெளிவருபவை. இரண்டாயிரம் சுவடிகளைப் பற்றிய விவரங்களை இந்நான்கு தொகுதிகளும் கொண்டுள்ளன. இது நிச்சயமாகத் தமிழ் ஓலைச்சுவடி ஆராய்ச்சியில் ஈடுபட்டுள்ள அறிஞர்களுக்கும் பொது மக்களுக்கும் பயன்படுவதாகும்.

இத் திட்டத்திற்கு நல்கை வழங்கிய தில்லி தேசிய ஆவணக் காப்பகத்தார்க்கும் இத்திட்டத்தில் இயக்குநராகவும், பதிப்பாசிரியராகவும் இருந்து அண்மையில் ஓய்வு பெற்ற பேராசிரியர் மு. சண்முகம்பிள்ளை அவர்களுக்கும் அதன்பின்னர் இத்திட்டத்தை நிறைவேற்றிய முனைவர் த. கோ. பரமசிவத்திற்கும் என்னுடைய பாராட்டுக்கள்.

தொகுப்புப் பணியில் ஈடுபட்ட முனைவர் வே. இரா. மாதவன், புலவர் ப. வெ. நாகராசன், மற்றும் இத்திட்டம் நிறைவேற ஒத்துழைப்பு நல்கிய அலுவலர் அனைவர்க்கும் என் பாராட்டுக்களும், வாழ்த்துக்களும் உரியன.

தமிழ்ப் பல்கலைக்கழகம்,
தஞ்சாவூர்.
நவம்பர் 13, 1987

ச. அகத்தியலிங்கம்

உள்ளுறை

1. அணிந்துரை
2. பதிப்புரை — க—ஙசு
3. மாற்றுச் சுவடிகள் காணும் இடங்கள் — ஙய—உஉ
4. தமிழ்ச்சுவடி விளக்க அட்டவணை — 1—646
   (1001 முதல் 1500 நூல்கள் வரை)
5. நூலாசிரியர் அகரவரிசை — 647—650
6. நூற்பெயர் அகரவரிசை — 651—661
7. பொருட்பகுப்பு வரிசை — 662—664
8. பிழை திருத்தம் — 665—668

இத் திட்டத்தின் வாயிலாக உருவாகியுள்ள நூல்களே இப்போது வெளிவருபவை. இரண்டாயிரம் சுவடிகளைப் பற்றிய விவரங்களை இந்நான்கு தொகுதிகளும் கொண்டுள்ளன. இது நிச்சயமாகத் தமிழ் ஓலைச்சுவடி ஆராய்ச்சியில் ஈடுபட்டுள்ள அறிஞர்களுக்கும் பொது மக்களுக்கும் பயன்படுவதாகும்.

இத் திட்டத்திற்கு நல்கை வழங்கிய தில்லி தேசிய ஆவணக் காப்பகத்தார்க்கும் இத்திட்டத்தில் இயக்குநராகவும், பதிப்பாசிரியராகவும் இருந்து அண்மையில் ஓய்வு பெற்ற பேராசிரியர் மு. சண்முகம்பிள்ளை அவர்களுக்கும் அதன்பின்னர் இத்திட்டத்தை நிறைவேற்றிய முனைவர் த. கோ. பரமசிவத்திற்கும் என்னுடைய பாராட்டுக்கள்.

தொகுப்புப் பணியில் ஈடுபட்ட மூனைவர் வே. இரா. மாதவன், புலவர் ப. வெ. நாகராசன், மற்றும் இத்திட்டம் நிறைவேற ஒத்துழைப்பு நல்கிய அலுவலர் அனைவர்க்கும் என் பாராட்டுக்களும், வாழ்த்துக்களும் உரியன.

தமிழ்ப் பல்கலைக்கழகம்,
தஞ்சாவூர்.
நவம்பர் 13, 1987

ச. அகத்தியலிங்கம்

தில்லி, தேசிய ஆவணக்காப்பக நல்கைத் திட்டம்—1986-87

இத்திட்டத்தில் பணியாற்றியோர்

1. பேராசிரியர் மு. சண்முகம்பிள்ளை
   முன்னாள் சுவடிப்புலத் தலைவர்
2. முனைவர் த. கோ. பரமசிவம்
   தலைவர், ஓலைச்சுவடித்துறை
3. முனைவர் வே. இரா. மாதவன்
   விரிவுரையாளர், ஓலைச்சுவடித்துறை
4. புலவர் ப. வெ. நாகராசன்
   தொழில் நுட்ப உதவியாளர், ஓலைச்சுவடித்துறை.

பதிப்புரை

இந்நூல் தமிழ்ப் பல்கலைக் கழகத்தின் ஓலைச்சுவடித்துறையிலுள்ள தமிழ்ச்சுவடி விளக்க அட்டவணையின் மூன்றாம் தொகுதியாகும். இதன்கண் 1001 முதல் 1500 வரையிலுள்ள நூல்களின் விரிவான விளக்கங்கள் இடம் பெற்றுள்ளன. தமிழ்ச் சுவடி விளக்க அட்டவணையின் முதல் தொகுதியில் 1 முதல் 500 வரையிலான நூல்களின் விளக்கமும், இரண்டாந் தொகுதியில் 501 முதல் 1000 வரையிலான நூல்களின் விளக்கமும் இடம் பெற்றிருந்தன. முதல் தொகுதியில் பேரா. மு. சண்முகம்பிள்ளை யவர்களின் அரிய முகவுரைப்பகுதி இடம்பெற்று அத் தொகுதியை அணி செய்தல் காணத்தகும்.

இம் மூன்றாம் தொகுதியில் சுவடி விளக்கமுறை முதலியன எல்லாம் முதற் தொகுதியிற் போலவே அமைக்கப்பெற்றுள்ளன. இத்தொகுதியின் தொகுப்புப் பணியினை முனைவர் வே. இரா. மாதவன், விரிவுரையாளர் அவர்களும், புலவர் ப.வெ. நாகராசன் தொழில் நுட்ப உதவியாளர் அவர்களும் மேற்கொண்டிருந்தனர். இத்தொகுதியில் இடம்பெற்றுள்ள சுவடிகளுள் பெரும்பாலன அன்பர்களின் அன்பளிப்பாகப் பெறப்பட்டனவேயாம். சுவடிகளை வழங்கிய அப்பெரியோர்களின் பெயர்முதலியன இப்பதிப்புரையின் இணைப்பில் காணலாகும்.

மூன்றாம் தொகுதியின் சுவடிகள்

இத் தொகுதியில் ஒரேட்டை மட்டுமே கொண்ட நூல் முதல்-727 ஏடுகளைக் கொண்ட நூல் வரை அளவில் பலதரப்பட்ட நூல்களின் விளக்கங்கள் இடம் பெற்றுள்ளன. தனிப்பாடல்கள் – 1107, விடுகதைக்கணக்கு - 1110, தனிப்பாடல்கள் - 1125, அகத்தியர் பஞ்சபூதக்கும்மி-1160 என்பன ஒரேட்டைக் கொண்ட நூல்கள். இவற்றுள் பின்னிரு நூல்கள் ஏட்டில் ஒரு பக்கம் மட்டுமே அமைந்தனவாம்.

மகாபாரத அம்மானை – 1129, 1130 என்னும் சுவடி 727 ஏடுகளைக் கொண்ட மிகப்பெரிய சுவடியாகும். பேரளவு காரணமாக இச்சுவடி இரண்டு சுவடியாகப் பிரிக்கப்பெற்று 400 ஏடுகள் கொண்டது முதற்பகுதியாகவும் 327 ஏடுகள் கொண்டது